# தேங்காய் சிரட்டையில் கலைப்பொருட்கள்

# பயிற்சி முடித்த பெண்களுக்கு சான்றிதழ்

பந்தலூர், மார்ச்26: பந்தலூரில் பெண்களுக்கு தேங்காய் சிரட்டையில் கலைப்பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சிபி ஆர் சுற்றுச்சூழல் கல்வி மையம் மற்றும் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் சார்பில் பந்தலூர் அண்ணாநகரில் தேங்காய் சிரட்டை பயன்படுத்தி பல்வேறு கலை பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது.



பந்தலூரில் பெண்களுக்கு தேங்காய் சிரட்டையில் கலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

60 நாட்களாக நடைபெற்ற இந்த பயிற்சி வகுப்பில் 30 பெண்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். அதன் நிறைவு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பந்தலூரில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. கல்வி மைய இயக்குனர் முன்னைவர் சுதாகர் தலைமை தாங்கினார். இணை இயக்குனர் ஸ்ரீதர் முன்னிலை வகித்தார். கள அலுவலர் குமாரவேலு வரவேற்றார். தொடர்ந்து பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ் வழங்கி வாழ்த்தி பேசினர். அதன்பின் 60 நாட்களாக நடைபெற்ற பயிற்சியின் சிறப்பு அம்சங்கள் மற்றும் அனுபவங்கள் குறித்து பயிற்சி பெற்ற பெண்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். நிகழ்வில் சமூக ஆர்வலர் ராபர்ட் மற்றும் பயிற்றுனர்கள் ஹரிதா, ரமணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.